# அகதிகள் உலகெங்கும்

ஏழ்மையினால் உந்தப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் ஆறு இலட்சம் ஆப்பிரிக்க இளைஞர்கள் (அதாவது ஒவவொரு மாதமும் ஐம்பதாயிரம் இளைஞர்கள்) ஆப்பிரிக்காவிலிருந்து மத்திய தரைக் கடலைத் தாண்டி ஐரோப்பாவிற்குள் நுழைய முயற்சி செய்கின்றனர். இந்த ஏழை இளைஞர்களுக்கு உதவி செய்யும் நோக்குடன் ஒரு சில நல்ல மனமுடைய ஐரோப்பியர்கள் கப்பல்களை விலைக்கு வாங்கி மத்திய தரைக் கடலைக் கடக்க இவர்களுக்குத் துணை புரிந்து வந்தனர். ஆனால், இவர்களின் கணிசமான வருகையைத் தாங்க முடியாமல் இத்தாலி நாடு, சென்ற மாதம் ஆப்பிரிக்காவிலிருந்து நூற்றுக் கணக்கான அகதிகளோடு வந்த **Aquarius**, மற்றும் **Life Line** என்ற இரு கப்பல்களைத் தன் துறைமுகங்களில் ஏற்க மறுத்து விட்டது.

ஐரோப்பியர்கள் குழந்தைகள் பெறுவது குறைந்துள்ளதால், ஐரோப்பாவின் சனத் தொகை ஆண்டு தோறும் ஒரு மில்லியன் குறைவதாகவும் எனவே அகதிகள் எமக்குத் தேவையே என்றும் பாப்பரசர் பிரான்சிஸ் சுட்டிக் காட்டியுள்ளார். ஆனால் ஆப்பிரிக்காவிலிருந்து வரும் படிக்காத, ஏழை இளைஞர்களை ஏற்றுக் கொள்ள ஐரோப்பிய நாடுகள் மிகவே தயங்குகின்றன. ஏற்கனவே ஐரோப்பாவில் எட்டு வீதம் வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பதாகவும், எனவே இம்மாதிரி இளைஞர்கள் வருவதால் இன்னும் வேலையில்லாத் திண்டாட்டம் கூடுமேயொழிய, ஒரு நாளும் குறையாது என்றும் ஐரோப்பியத் தலைவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஆப்பிரிக்கக் கண்டத்தின் மக்கள் தொகை இன்று நூற்று இருபது கோடியாகும் (1.2 **billion**). ஐரோப்பாவின் சனத் தொகையோ இன்று 50 கோடியாகும் (**half a billion**). எனவே ஆப்பிரிக்க மக்களுக்காகத் தங்கள் நாடுகளின் கதவுகளைத் திறந்து விட்டால் அவர்கள் கணக்கில்லாமல் வந்து குவிந்து விடுவர் என்று ஐரோப்பிய நாடுகள் பயப்படுகின்றன.

இன்று ஆப்பிரிக்கா, நாளை தென்னமரிக்கா, நாளைக்கு மறு நாள் ஆசியா என்று பேசப் படுகிறது. அதாவது உலகின் பிற இடங்களிலும் இன்று அகதிகளின் பிரச்சினை பெரிதாகத் தலையெடுக்க ஆரம்பித்துள்ளது. மெக்ஸிக்கோ-அமெரிக்க எல்லையிலும், சிரியா போன்ற மத்திய கிழக்கு நாடுகளிலும் நடைபெற்று வரும் அகதிகள் பிரச்சினையை சற்றே ஊர்ந்து கவனித்தால் இவ்வுண்மை எங்களுக்கு விளங்கும். இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இருநூறு கோடியாக (2 **billions**) இருந்த உலகின் மக்கள் தொகை இன்று இருபத்தொன்றாம் நூற்றாண்டின் துவக்கத்தில் எழுநூறு கோடியாக (7 **billions**) உயர்ந்து விட்டதும் இதற்கு ஒரு காரணமாகும். எனவே உலகிலே புதியதொரு சவால் தோன்றியுள்ளது என்று நாங்கள் கூறலாம்.

நொறுங்கிய இதயங்களுக்காக செபங்களை ஏறெடுக்க வேண்டியது ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமையென்றும் உலகின் அகதிகள் பிரச்சினைக்காக இறைவனை நோக்கி மன்றாட முக்கியமான நேரம் இது என்றும் பரிசுத்த தந்தை பிரான்ஸிஸ் சுட்டிக் காட்டியுள்ளார். இத்தாலி நாட்டின் கடற்கரைக்குச் சென்று இம் மக்களுக்காக அவர் மலர் அஞ்சலி செலுத்தி அவர்களும் மனிதர்கள் தான் என்ற உண்மையை வலியுறுத்தியுள்ளார். ஒரு நாள் அகதிகளாக இருந்த நாங்களும் திருத் தந்தையுடன் ஒன்றிணைந்து இம் மக்களுக்காக இறைவனை வேண்டிக் கொள்ள மறவாதிருப்போமாக.

கிறிஸ்துவில் அன்புடன்,